கடவுள் துணை.

கலாதரங்கிணி.

புத்தகம் க.] கஅஅசு௵ பிப்ரவரி௴ [சஞ்சிகை க.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதி யாகித்
னானந்த வில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
னந் தவிர்த்தெம்மை யாள்வானெ ரருளினு லெளியவர்ச் சையுமாகியுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்

அன்பர்களே, இக்காலத்தில் இச்சென்னை முதலிய பல இடங்களிலும் ஆங்கிலேய பாஷையில் அனேக சமாசார பத்திரிகைகள் ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கிலச்சிட்டுப் பிரசுரஞ் செய்யப்படுகின்றனவென்பது எல்லோர்க்கும் தெரிந்த காரியமல்லவா? சமாசார பத்திரிகைகளாலுண்டாகும் நன்மை இத்தன்மைத்தெனத்தெரிந்தவர்களாய் நம்மவர்களும் தமிழ்ப்பாஷையில் சில சமாசாரபத்திரிகைகளை அச்சிட்டுப் பிரசுரஞ்செய்து வருகிறார்கள் என்பதும் பலருக்கும் தெரிந்த விஷயமே. அப்படியே ஆங்கிலேயபாஷையில் பெரும்பான்மையும் வித்தியாவிஷயங்களையும் சாஸ்திரவிஷயங்களையுமே குறித்து மாசசஞ்சிகைகள் முதலியவாக அனேகங்கள் அச்சிட்டுப் பிரசுரஞ் செய்யப்படுவதுபோல நம்முடைய தமிழ்ப்பாஷையிலதிகமா யில்லாததனால் **கலாதரங்கிணி** என்னும் பெயரினால் ஒருபத்திரிகை மாதந்தோறும் அச்சிட்டுப் பிரசுரஞ்செய்ய ஆரம்பித்திருக்கிறோம். இதில் பெருமபாலும் வேதம், வேதாங்கம், மீமாம்சை, ஞாயம், புராணம், இதிகாசம், முதலியவற்றிலுள்ள விஷயங்களும், ஆங்கிலேயபாஷையிலிருக்கும் அருமையான சில சாஸ்திரங்களின் ஸாராம்சங்களும், சென்னைச் சர்வகலாசாலைப் பரீட்சைகளுக்கு ஏற்படும் தமிழ்ப்பாடங்களுள் முக்கியமானவற்றிற்கு ஒருவாறு உரைமுதலியனவும்; சிறுபான்மை விநோத கதைகள், விடுகதை

கள், பழமொழிகள் முதலியவைகளும் எழுதப்படும். மேலும், வித்வான்கள் யாரேனும் தங்களுடைய கல்விக்களஞ்சியத்திற் சேர்த்து வைத்திருக்கும் அருமையான விஷயங்களை இப்பத்திரிகையின் மூலமாக வெளியிடவிரும்பினல் அதற்கும் இடங்கொடுக்கப்படும். மத விஷயங்களை எடுத்துச் சொல்லும்போது உயர்வுதாழ்வுகளைப் பற்றிய அபிப்பிராயங்களை விலக்கிப் பொதுவாக அவைகள் இன்னின்னவென்பதும் இன்னின்ன வகையில் ஒன்றின் மற்றென்று பேதப்படுகிறதென்பதும் சுருக்கமாய் எழுதப்படும்.

யாம் செய்யத்துணிந்த இக்காரியம் மூற்றக்கற்ற வித்வான்களுக்கும், சாஸ்திரக்ஞர்களுக்கும் பரிகாசத்துக் கிடமா யிருக்குமாயினும், சாதாரண ஞானமுள்ளவர்களுக்கும் பாடசாலை மாணுக்கர்களுக்கும் சிறிது உபகாரகமா யிராமற்போகாதென்று நம்புகிறோம். ஆகையால் வித்தியாபிவிருத்தியில் சிரத்தையுள்ள புத்திமான்கள் எம்முயற்சி தளர்ச்சியடையாதிருக்கும்படி இப்பத்திரிகையை விசேஷமாய் வியாபிக்கச் செய்வார்களென்று கோருகிறோம். இதில் யாமெழுதும் விஷயங்களுள் அங்கங்கே எமது சிற்றறிவுக்குப்புலப்படாத குறைகளையும் குற்றங்களையும் யாரேனும் கடிதமூலமாக எமக்குத் தெரிவிப்பராயின் அவற்றை அவர்கள் பெயருடன் இப்பத்திரிகையிலேயே அச்சிட்டுப் பிரசுரஞ்செய்வோம்.

யாமெடுத்த இக்காரியம் இடையூறின்றி இனிது நிறைவேறி வரும்படி ஸர்வேசுவரனை யாம் பிரார்த்திப்பதுபோல இப்பத்திரிகையைப் படிப்பவர்களும் பிரார்த்திக்க வேண்டுகின்றனம்.

மதவிஷயம். *

நெடிய கடல் சூழ்ந்த இப்பூமண்டலத்தில் இந்துஸ்தானமென்றுவழங்குகிற இந்த பரதகண்டத்தில் தொன்றுதொட்டு வழங்கி வருகின்ற மதத்திற்கு வைதிகமதமென்று பெயர். வேதத்தால் போதிக்கப்பட்டது வைதிகம். வேதமென்னும் பதத்திற்கு 'தத்துவங்களை அறிவிப்பது' என்கிறது பொருள், ஆனாலும் அந்தச்

---

* இந்த விஷயம் பெரும்பாலும் தி. ஈ. ஸ்ரீநிவாஸராகவாசாரியரால் அர்ச்சாதீபமென்னும் கிரந்தத்தின் முகவுரையிலும் கலாவர்த்தனி பத்திரிகையிலும் எழுதப்பட்டவற்றுளிருந்தும், சிறுபான்மை வேறுசில நூல்களிலிருந்தும் சேர்த்தெழுதப்பட்டது.

சொல் காரணவிடுகுறியாய் ஒருவகைநூலை யுணர்த்துமே யன்றிக் காரணமாத்திரத்தினால் மற்றொருநூலையும் உணர்த்தாது. ஆயுர்வேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், காந்தர்வவேதம், என்று இப்படி வேறொரு பதத்தோடு கூடினால் வேறு நூலை யுணர்த்தும். ஆயுர்வேதமாவது,—வியாதிநிதானம்* வியாதிச்சின்னம்† முதலியவற்றையறிந்து மணிமந்திரௌஷதாதி சிகிச்சைகளால்ஆயுராரோக்கியாதிகளைச் சொல்வது. இதுவே வைத்தியசாஸ்திர மென்னப்படுவது. அர்த்தவேதமாவது,—தக்ஷிணை, ஆஜ்யம், சரு முதலியவைகளை நிர்ணயம் பண்ணுவித்து தர்மார்த்த காமமோக்ஷமென்கின்ற சதுர்வித புருஷார்த்தத்திற்கும் சாதனமா யிருப்பது. தனுர்வேதமாவது,—சத்துருவை ஜெயிப்பதற்குரிய மந்திராதிப் பிரயோகங்களையும், ஆயுதங்களிற் பயிலும் வகைகளையும் அறிவிப்பது. இது ஆயுதசாஸ்திரமென்றும் சொல்லப்படும். காந்தர்வவேதமாவது,—சாமவேதாதிகளால் ஸ-ரி-க-ம-ப-த-நி என்னும் ஸப்தஸ்வரகீத பிரபந்தங்களை வியவகரிப்பது. இதுவே சங்கீதசாஸ்திர மென்னப்படுவது.

இந்தவேதமானது ஒருவராலுஞ் செய்யப்படாமல் அநாதியாயிருந்து கடவுளால் பிரமாவுக்கு உபதேசிக்கப்பட்டு வழிவழியாய் உலகத்திற் பரவினதென்று சொல்லுகிறார்கள் ; கடவுளாற் செய்யப்பட்டதென்று சிலர் சொல்வதுமுண்டு; சுருதி என்பதும் இதன்பெயர் ; தொன்றுதொட்டுக் கேட்கப்பட்டுவருகிற தென்பது இதன் பொருள்.

இனி, வேதமாவ தென்ன? அதற்கு விஷயம், சம்பந்தம், பிரயோஜனம், அதிகாரி இவைகள் எவை? அது எப்படிப் பிரமாணமாயிற்று? என்னும் இவை யெல்லாந் தெரியாதபோது வேதத்தில் விசுவாசமுண்டாகாது; ஆகையால் மேலெழுதிய கேள்விகளுக்கு யஜுர்வேத பாஷியத்தின் முகவுரையைத்தழுவி ஒருவாறு விடையெழுதப்படுகின்றன.

இஷ்ட ப்ராப்தியையும் அநிஷ்ட நிவ்ருத்தியையும் அலௌகிகோபாயங்களாலே யறிவிக்குங் கிரந்தத்திற்கு வேதமென்று பெயர். அலௌகிக சப்தத்தாலிந்த பிரத்தியக்ஷாநுமானங்கள் விலக்கப்படுகின்றன.

சந்தனம், புஷ்பம், பெண்டிர் முதலியவைகளை அனுபவித்தல் இஷ்டத்தைப் பெறுதற்குக் காரணமென்றும், மருந்தருந்தல் முதலியவை அனிஷ்டத்தைப் போக்குதற்குக் காரணமென்றும் நாம் பிரத்தியக்ஷத்தாலே காண்கிறோம். அப்படியாகில், ‘ஜன்மாந்தர

---

* நிதானம்=ஆதிகாரணம். † சின்னம்=குறி (லிங்கம்.)

த்திலனுபவிக்கும் சுகதுக்கங்களையும் அனுமானத்தாலறியலாகும்' என்றால், ஒரு ஜன்மாந்தரத்திலாவது ஒருவரும் அப்படி சுகதுக்கங்களை யனுபவிக்கக் காணாமையாலே அது இசையாது. ஜ்யோதிஷ்டோமாதிகள் இஷ்டப்ராப்தி ஹேதுக்கள், * களஞ்சபக்ஷண வர்ஜனாதிகள் அனிஷ்டபரிஹார ஹேதுக்கள் என்பவை முதலிய விஷயங்களை வேதத்தினாலே யன்றிப் பிறிதுயாதொரு பதினுயிர மனுமானங்களாலும் அறிவதற்குப் பேரறிவாளனாலு முடியாது. ஆகையால் வேதத்தினாலேதான் அலௌகிகோபாயங்களை யறியவேண்டும்; ஆகையாற்றான்

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌣𑌾𑌨𑍁𑌮𑌿𑌤𑍍𑌯𑌾 𑌵𑌾 𑌯𑌸𑍍𑌤𑍂𑌪𑌾𑌯𑍋 𑌨 𑌬𑍁𑌧𑍍𑌯𑌤𑍇।
𑌏𑌨𑌂 𑌵𑌿𑌦𑌨𑍍𑌤𑌿 𑌵𑍇𑌦𑍇𑌨 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑌸𑍍𑌯 𑌵𑍇𑌦𑌤𑌾॥

[பிரத்தியக்ஷத்தாலாவது அனுமானத்தாலாவது எந்த உபாயம் அறியக்கூடாமலிருக்கிறதோ அந்த உபாயத்தை வேதமறிவிப்பதனால் அதற்கு வேதமென்று பெயர்]

என்றுசொல்லப்பட்டது.

வேதத்துக்கு விஷயம் இவ்வகை உபாயமே; பிரயோஜனம் இவ்வுபாயத்தை யறிகையே; அதிகாரி, இவ்வுபாயத்தை உணரவிரும்புவோன்; சம்பந்தம், இவன் அந்த உபாயத்தா லுபகரிக்கப்படுவதும், இவனுக்கு அந்த வுபாயம் உபகாரஞ் செய்வதுமாம்.†

இப்படிப்பட்ட உபாயத்தை யுணரவிரும்புவோன் அதிகாரியாகில், எனக்கு இஷ்டம்வேண்டும், அநிஷ்டம் வேண்டாம் என்கிற வேண்டுகோள் எல்லாருக்குமிருப்பதனால் ஸ்திரீசூத்திரர்கள் வேதத்துக்கதிகாரிக ளல்லரென்பதேனெனில், உபநயனமான பின்பே வேதமோத விதித்திருக்கையாலும் ஸ்திரீசூத்திரர்களுக்கு உபநயனமில்லாமையாலும், அவர்களுக்கு அலவுகிகோபாயங்களை அறிய விருப்பமிருப்பினும் அவர்கள் வேதமோத அதிகாரிகளல்லர். அவர்கள் அவ்வுபாயங்களைப் புராணங்களாலறிந்து கொள்ளலாம். இது விஷயமாய்,

𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑍂𑌦𑍍𑌰𑌦𑍍𑌵𑌿𑌜𑌬𑌨𑍍𑌧𑍂𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀 𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌗𑍋𑌚𑌰𑌾।
𑌇𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 𑌮𑍁𑌨𑌿𑌨𑌾 𑌕𑍃𑌪𑌯𑌾 𑌕𑍃𑌤𑌮𑍍॥

[ஸ்திரீகளும் சூத்திரரும் சாதியொழுக்கங்கெட்ட இருபிறப்

---

* களஞ்சபக்ஷணவர்ஜனம் = கஞ்சாத்தின்னலைவிடுகை.

† இந்த சம்பந்தத்தை வடநூலார் 'உபகார்யோபகாரகபாவ சம்பந்தம்' என்பர்.

பாளரும் வேதத்தைக் காதினாலே கேட்கக்கூடாது என்பதைப் பற்றி வியாசபகவான் வேதார்த்தத்தைப் பாரதமாகச் செய்தார்] என்றுபிரமாண வசனமிருக்கிறது. ஆகையால் உபநீதரான பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் இவர்களே வேதமோத அதிகாரிகள்.

இனி, வேதம் பிரமாணமென்று வேதத்திலேயே சொல்லியிருப்பதால் வேதத்தைப் பிரமாணமாகக்கொள்ளக்குறையில்லை. உலகத்தில் புருஷனுக்கு மதிமயக்க மொருகாலுண்டாயிருக்கக் கூடுமென்கிற சங்கையால் அவனப்படிப்பட்டவனல்ல னென்பதை இன்னொருபிரமாணத்தாலறிந்துகொண்டு அவன்செய்தநூலை பிரமாணமாகக் கொள்ளவேண்டி யிருக்கின்றது. வேதம் நித்தியமாகையால் அதைச் செய்தவன் ஒருவனுண்டாகிலன்றோ அவனுடைய உண்மையை யறிவதற்கு வேறுபிரமாணத்தைத் தேடவேண்டுவது, அப்படியல்லாமையாலே வேதம் தன்கடையே பிரமாணமாயிற்று. இக்கருத்தையே

தத்ப்ரமாணம் பாதராயணஸ்யாநபேக்ஷத்வாத் ॥

[செய்தவனுடைய குணங்களை எதிர்பார்க்க வேண்டாமையாலே வேதம் பிரமாணமென்று வியாசபகவான் நினைக்கின்றனர்]
என்கிற சூத்திரத்தில் ஜைமினிமுனிவரோதியிருக்கின்றனர்.

இனி,—

ருசஸ்ஸாமாநி ஜஜ்ஞிரே சந்தாம்ஸி ஜஜ்ஞிரே தஸ்மாத்யஜுஸ்தஸ்மாதஜாயத

என்று வேதமே ஓதுவதனுல் வேதமும் காளிதாசன் முதலியோர் செய்த காவியங்கள் போல் ஒருபுருஷனுற் செய்யப்பட்டதுதான்; வியாசபகவானும்

ஶாஸ்த்ரயோநித்வாத் ।

என்கிற சூத்திரத்தில் வேதம் பரப்பிரம்மத்தினிடத்திலிருந்து உண்டானதாக விளம்பியிருக்கின்றனர்; என்பதும் சரியல்ல. ஏனெனில்,—

வாசா விரூப நித்யயா ।

என்கிற வேதவாக்கியத்தாலும்,

அநாதிநிதநா நித்யா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா ॥

என்கிற ஸ்மிருதியினுலும் வேதம் நித்தியமென்று ஏற்படுகிறது.

அத ஏவ ச நித்யத்வம் ।

என்று வியாசபகவானும் வேதாதிகரணத்தில் சூத்திரித்திருக்கின்றனர். ஆகையால் வேதம் நித்தியமென்பதற்கு ஐயமில்லை.

ஆயின்,—

ஶாஸ்த்ரயோநித்வாத்।

என்கிற சூத்திரத்தின் பொருளுக்கும்

அதஏவ ச நித்யத்வம்॥

என்கிற சூத்திரத்தின் பொருளுக்கும் பொருத்த மெப்படியென்னில்,—லோக சிருஷ்டிக்குப் பின்னும் பிரளயத்துக்கு முன்னும் ஆகிய இடையிலுள்ள காலம் வியவஹாரகால மாகையால் அக்காலத்தில் காலாகாசங்களைப்போல வேதமும் நித்தியமென்னப் படுகின்றது. காளிதாசாதியர் செய்த காவியங்கள்போல வேதம் இன்னான் செய்த நூலென்று வழங்கப்படுவதில்லை; ஆகையால் வேதம் நித்தியமானது. காலாகாசங்களைப்போல வேதத்தையும் ஆதிசிருஷ்டியில் ஆண்டவன் படைத்தானென்று வேதமேயோதுகின்றது. ஆகையால விஷயம்மாறியிருப்பதைப்பற்றி சூத்திரங்களின் பொருள்களுக்கு ஒன்றற்கொன்று பொருத்தமில்லையென்ன ஒண்ணாது. பரப்பிரம்மம் குற்றமற்றதாகையாலே அதனிடத்திலிருந்துண்டானமைபற்றி வேதத்திற்கும் குற்றஞ் சொல்ல ஒண்ணாது. ஆகையால் 'வேதம் தன்கடையே பிரமாணமாயிற்று' என்பது ஒக்கும்.

இந்தவேதம் விதிவாதம், அர்த்தவாதம், மந்திரவாதம், நாமதேயம் என்று நான்குவிதமாய் ஸமஸ்த தர்மங்களையும் போதிக்கும். அவற்றுள் அரசனாணைபோல் புருஷனை நிஷித்த கருமங்களைச் செய்யாமல் ஸத்கருமங்களையே செய்ய விதிப்பது விதிவாதமாம். பட்டுக்களைப்போல வேதார்த்தத்தின் மகிமையைத் துதிப்பது அர்த்தவாதமாம். ஆசிரியனைப்போல் செய்யத்தக்கதிதுவெனக் காண்பிப்பது மந்திரவாதமாம். தாய்தந்தையரைப்போல யாகாதிகளுக்குப்பெயரிடுவது நாமதேயமாம்.

[தொடர்ச்சி.]

பாஷாவிஷயம்.*

பாஷையென்பது ஒருவர்கருத்தை மற்றொருவருக்கு அறிவிக்கக் கருவியான ஒலியாம். அது சொற்றொடர் சொரூபமாயிருக்கின்றது. இச்சொற்கள் அந்தந்தப்பொருள்களுக்குக் குறியாக ஏற்படுத்தப்பட்டவைகள். ஆதியில் அவை ஏற்படுத்தப்படும்போது அவைகளுக்குத் தோற்றத் தின

* இது கலாவர்த்தனி, ஜநவிநோதினி, ஸுஜநரஞ்ஜநி முதலியவற்றிலிருந்து சேர்த்து எழுதப்பட்டது.

லோ, ரூபத்தினாலோ, வேறெந்தவகையினாலோ, அப்பொருள்களோடு யாதேனுமோர் ஒற்றுமை இருக்கலாம்; அது பிற்காலத்தில் நன்றாய் விளங்கவில்லை.

இனி, இக்காலத்தில் பல பாஷைகளிருக்கின்றனவேனும் திருத்தமும் தேர்ச்சியுமடைந்திருக்கிற பாஷைகள்சிலவேயுளவாம். அநேகபாஷைகளுக்கு அக்ஷரமென்பதே கிடையாது. அவையெல்லாம் வெறும்பேச்சேயொழியப்பின்னொன்றுமில்லை. அப்பேச்சும் திருத்தமும் இனிமையுமின்றி மிகவும் சீர்கேடாயிருக்கும். அப்பாஷைகளிலுள்ள சொற்களும் மிகச்சிலவேயாம். வேறனேக பாஷைகளுக்கு அக்ஷரமிருந்தும் திருத்தமுமில்லை, தேர்ச்சியுமில்லை. அவைகளில் இலக்கணமுதலிய நூல்கள்கிடையா. உண்ணல், உடுத்தல் முதலிய பெரும்படிசான காரியங்களுக்கடுத்த சொற்களும் கருத்துக்களுமாத்திரம் அவற்றுட் காணப்படுமேயன்றி, அறிவுவிருத்திக்கனுகூலமானவைகளும் நாகரிகத்துக்கு நன்கமைந்தவைகளுமான கருத்துகளும், யோசனைகளுமகப்படா. ஆதலால் ஒருபாஷையின் தேர்ச்சியும் திருத்தமும் எவ்வளவோ அவ்வளவுதான் அப்பாஷையைப் பேசுகிறசனங்களின் அறிவும் நாகரிகமுமிருக்குமென்று அறியலாம். ஆகவேமக்களுயிர்க்கு இம்மை மறுமைகளினியல்புகளையுணர்த்தி அவர்மனதை விசாலமாக்கி நன்மையளிக்கத்தக்கநூல்கள்நிரம்பிய பாஷைகளே திருத்தமும் தேர்ச்சியுமடைந்த பாஷைகளென்று ஏற்படுகின்றது. ஆயினும், எல்லாவற்றிற்கும்முதலாய் ஒரு பாஷை இருத்தல்வேண்டும். அதன் சார்பினாலும் பிறவகையினாலுமே மற்றப்பாஷைகள் உண்டாயிருக்கும். இந்தப்பாஷை யாதென்று ஊகிக்கையில் ஸம்ஸ்கிருதமென்று சிலரும், ஹீப்ருவென்று சிலரும்சொல்லுகிறார்கள். பெரும்பாலார் அபிப்பிராயத்தினால் ஸம்ஸ்கிருதமே ஆதிபாஷையென்று நிச்சயிக்கப்படுகின்றது. மேலும்பரதகண்டமென்னும் இவ்விந்துதேசத்துச் சகல பாஷைகளுக்கும் இதுவே முதலென்பது தெளிவாயிருக்கின்றது.

ஸம்ஸ்கிருதம் என்பதற்கு அபப்பிரம்சம் முதலிய தோஷங்களின்றி நன்றாகச்செய்யப்பட்டதென்பது பொருள். இது தேவதைகள் பேசும் பாஷையாகையால் தேவபாஷை யென்றும், அனாதியான வேதத்திற்காதாரமாய் மற்றப் பாஷைகள் எல்லாவற்றிற்கு முதன்மையானதால் ஆதிபாஷை யென்றும் பெயர்பெற்றிருக்கின்றது. இந்தப்பாஷைதான் அறிவை வளர்க்கும் வித்தைகளாகவும் கலைகளாகவும் தந்திரங்களாகவும் மற்றும் பலவாகவும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த ஸம்ஸ்கிருதபாஷைக்குப் பாணினிபகவான் என்பவர் ஓர் இலக்கணநூல் செய்யக்கருதி மகேசுவரரைக் குறித்துத் தவசுசெய்தாரென்றும், அவர்க்கு அம்மகேசுவரர் பிரசன்னராய்த் தமது கையிலிருந்த டமருவென்னும் வாத்தியத்தினாலே

𑌅𑌇𑌉𑌣𑍍 । 𑌋𑌌𑌕𑍍 । 𑌏𑌓𑌙𑍍 । 𑌐𑌔𑌚𑍍 । 𑌹𑌯𑌵𑌰𑌟𑍍 । 𑌲𑌣𑍍 ।
𑌞𑌮𑌙𑌣𑌨𑌮𑍍 । 𑌝𑌭𑌞𑍍 । 𑌘𑌢𑌧𑌷𑍍 । 𑌜𑌬𑌗𑌡𑌦𑌶𑍍 । 𑌖𑌫𑌛𑌠𑌥𑌚𑌟𑌤𑌵𑍍 । 𑌕𑌪𑌯𑍍 । 𑌶𑌷𑌸𑌰𑍍 । 𑌹𑌲𑍍 ।

என்னும் பதினன்கு முக்கியசூத்திரங்களை யுபதேசித்தாரென்றும், அம்மாஹேசுவர சூத்திரங்களை ஆதாரமாகக்கொண்டு அவர் அவ்விலக்கணநூலைச் செய்துமுடித்தாரென்றும், ஆதலால் ஸம்ஸ்கிருத வியாகரணத்துக்கு முதலாசிரியர் சிவபெருமான் என்றும், வடநூலுடையார் வழங்கிவருகின்றனர். அவ்விலக்கணநூல் முழுமையும் சூத்திரமாகவே யியற்றப்பட்டமையால் அச்சூத்திரங்களுக்கு காத்தியாயனரென்னும் நாமாந்தரமுள்ள வரருசி என்பவர் (வாக்கியங்கடையில்) ஒருவாறு உரையியற்றினர். பின்பு பதஞ்சலியென்பவர் அவ்வுரையைத்தழுவி அந்நூலுக்கு மிகவும் சமர்த்தன்மாக ஓர்பாஷியம் செய்திருக்கின்றனர். அதற்கு **மஹாபாஷியம்** என்று பெயர்வழங்குகின்றது. அந்த ஸம்ஸ்கிருத பாஷை மிகவிசாலமாயும் நினைத்த விஷயங்களைச் சுருக்கியும் பெருக்கியும் பிரசங்கிக்கவும் எழுதவுந்தக்க நிலைமையுடையதாயு மிருக்கின்றது. விரிந்த கடல்போல விளங்குகின்ற அதன் வியாகரண நூலாலேயே அதனைப் பெரும்பாலும் சுவாதீனஞ் செய்துகொள்ளலாம்.

இனி, இந்த ஸம்ஸ்கிருத பாஷையின் பதங்கள் தமிழிற்பிரவேசிப்பதற்கு இரண்டுவழியுண்டு. அவற்றுளொன்றில் அவையிடையிற்றங்கிவரும், அத்தங்குமிடம் **பிராகிருதம்** என்னப்படும்; மற்றொன்றில் அப்படியில்லை; என்றால், ஸம்ஸ்கிருத பதங்கள் சில முதலில் பிராகிருதத்திற் பிரவேசித்து அதிலிருந்து தமிழில்வந்து வழங்குகின்றன, சில அவ்வாறன்றி நேரே தமிழிற் பிரவேசிக்கின்றன என்றதாயிற்று.

ஸம்ஸ்கிருதபாஷையிலிருந்து பிராகிருதத்திலும் தமிழிலும் எடுத்து வழங்கப்படும் பதங்கள் **தற்சமம், தற்பவம்** என இருவகைப்படும். அவற்றுள் பகுதி விசேஷ விகாரப்படாமல் விகுதிமுதலிய விகாரங்களைப்பெற்று வழங்கப்படுவன **தற்சமமாம்**. பகுதியிலும் எழுத்துக்கள் தோன்றல் திரிதல் முதலிய விகாரங்களையடைந்து வழங்கப்படுவன **தற்பவமாம்**. பிராகிருத பாஷையிலும் தமிழ்ப்பாஷையிலும் ஸம்ஸ்கிருதபாஷையின் சம்பந்தமில்லாமலே சிலபதங்கள் வழங்கப்படுகின்றன. அவைதேசவியவகாரத்தையே மூலமாகக்கொண்டு இருத்தலால் **தேசியம்** என்னப்படும்.

பிராகிருத பாஷையானது ஸம்ஸ்கிருதபாஷையின் விக்ருதியாகையாலே பிராகிருத மென்னப்பட்டது. பிராகிருதமென்னும் பதத்துக்கு பிரகிருதி [=ஸம்ஸ்கிருதம்] சம்பந்தமானது என்பதுபொருள். அது பிராகிருதம், சௌரஸேனி, மாகதி, பைசாசி, சூளிகாபைசாசி, அபப்பிரம்சம் என ஆறுபிரிவுள்ளது. அவற்றுள்,—(1) மகாராஷ்டிர தேசத்தில் வழங்கப்பட்ட

பாஷை பிராகிருதம்; (2) சூரஸேன தேசத்தில் பிறந்தது சௌரஸேனி; (3) மகததேசத்திலுண்டானது மாகதி; (4-5) பிசாச தேசங்களிலுண்டானது பைசாசியும் சூளிகாபைசாசியும்; [கேகயம், நேபாளம், பாஹ்லிகம், குந்தலம் முதலிய சில தேசங்கள் பிசாசதேசங்களென்னப்படும்]; (6) இடையர் முதலாயினோர்பாஷை அபப்பிரம்சம்; ஆம். அறுவகையாகிய இப்பாஷைக்கு ஸம்ஸ்கிருத நாடகாதிகளில் அந்தந்தப் பாத்திரங்களுக்கனுரூபமாகப் பிரயோகங்கள் காணப்படும். [பாத்திரமாவது,—வேஷம்.] நாடகாதிகளில் ஸ்திரீபாத்திரங்களுக்கும் ஹாஸ்யகாரர் முதலியவர்களுக்கும் பிராகிருதபாஷை யுபயோகிக்கப்படும். அதமபாத்திரங்களுக்கு சௌரஸேனி யுபயோகிக்கப்படும். அதியதமபாத்திரங்களுக்கு மாகதி வினியோகிக்கப்படும். ராக்ஷஸ பிசாச நீசபாத்திரங்களுக்கு பைசாசியும் சூளிகாபைசாசியும் வழங்கப்படும். சண்டால யவனாதி பாத்திரங்களுக்கு அபப்பிரம்சம் உபயோகிக்கப்படும். இப்பாத்திரங்கட்கெல்லாம் ஒவ்வோர் காரணத்தைப் பற்றி பாஷைவேறுபாடு முண்டு.

இந்தப் பிராகிருதபாஷைக்கு வால்மீகி வரருசி முதலியோர் இலக்கணநூல்கள் இயற்றியிருக்கின்றனர். பிராகிருதபாஷையிலே காளிதாசன் ஸேதுபந்தம் என்றொரு காவியம் செய்திருக்கின்றான். சாலிவாஹனன் இப்பாஷையிலேயே ஸப்தசதீ என்றொருநூல் செய்திருக்கின்றான். வரருசி யென்பவர் பிருஹத்கதை என்றொரு பெரியநூல் செய்திருக்கின்றார் என்றும் கேள்வி. ஜைனருடைய வேதங்கள் புராணங்கள் இதிகாசங்கள் முதலியவை பிராகிருதபாஷையிலேயே யிருக்கிறதாகத் தெரியவருகிறது. இந்தப்பாஷையானது இப்போதைய உலகவழக்கத்தில் வழங்காததாயிருப்பினும், சிந்தாமணி மணிமேகலை முதலிய பெருநூல்களைத் தமிழிலே செய்த ஜைனருடைய முதனூல்கள் பெரும்பாலும் இப்பாஷையிலேயே இருப்பதாய்த் தெரியவருகிறபடியால் இவ்வளவு பிரஸ்தாபிக்க நேர்ந்தது.

இனி, இக்காலத்துச் சற்றேறக்குறைய அறுபது லக்ஷம் ஜனங்களால் பேசப்பட்டு வரும் தமிழும் ஸம்ஸ்கிருதத்தோடொப்பப் பழமையான பாஷையேயாம். இத்தமிழ்வழங்கு நிலம் பரதகண்டத்தில்,—

"வடவேங்கடந் தென்குமரியாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து" என்றும்,
"வடக்குந் தெற்குங் குடக்குங் குணக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான்கெல்லை யகவையிற் கிடந்த (நூல்)"

என்றும், எடுத்தோதப்படுகிறபடியே வடக்கின்கண் திருவேங்கடமும், தெற்கின்கண் கன்னியாகுமரியும், கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும் கட

லும் எல்லையாக உடைய தென்னாடாம். இத்தென்னாடு திராவிடதேசமெனப் பெயர் பெறும். இத்தென்னாட்டில் வழங்குதல்பற்றித் தமிழ்மொழி தென்மொழி யெனவும்படும். ஸம்ஸ்கிருதம் பொதுவாயினும் ஆதியிலே வடதிசையினின்றும் தென்றிசைக்கு வந்தமையால் வடமொழி யெனப்படும். இத்தமிழ்பாஷையைப் பற்றின சங்கதிகள் புராணங்களிற் காணப்படுகின்றன. இதற்கு ஆகஸ்தியம் என்ற வடமொழிப் பெயரொன்றுண்டு; அதன் பொருள் அகஸ்தியமுனிசம்பந்தமான தென்பதாம். அதாவது :— பூர்வகாலத்தில் ஸ்ரீவேதவ்யாசபகவான் ஸம்ஸ்கிருதபாஷையை அபிவிர்த்திசெய்து காசியில் வடமொழிச் சங்கமொன் றேற்படுத்த, அச்சங்கப்புலவருள் ஒருவராகிய அகத்தியனார் மற்றப் புலவர்களோடு பலகாலுந் தர்க்கஞ் செய்துகொண்டு வந்து ஒருநாள் அவர்களோடு மாறுகொண்டு அவரிறுமாப்பை யடக்கும் பொருட்டுக் கைலாசகிரியிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய புத்திரராகிய சுப்பிரமணியசுவாமியிடஞ் சென்று தங்கருத்தை வெளியிட்டு, இருவரும் சற்றுநேரம் பேசிக்கொண்டிருக்கையில், தாம் நின்ற மண்டபமுழுவதும் கமகமவென்று திவ்விய பரிமளம் வீச, அகத்தியர் சுப்பிரமணிய சுவாமியை நோக்கி, ‘சுவாமீ ! இவ்வாசனை எது’ என்று மிக ஆவலோடு வினவ, சுப்பிரமணியசுவாமிகள் அவரை அம்மண்டபத்தின் ஓர் மூலைக்கு அழைத்துக்கொண்டுபோய் அவ்விடத்துக் குவியலாய்ப் போட்டிருந்த சில ஏட்டுப்பிரதிகளைக் காட்டவே கண்டமாத்திரத்தில் மதுரமென்றருத்தங்கொள்ளும் “தமிழ் தமிழ்” என்னு மின்பமான பெயரைச்சொல்ல, உடனே சுப்பிரமணிய சுவாமி அந்தப்பாஷைக்கு ஆதாரவிதிகள் இவ்வேட்டுப் பிரதிகளிலுளவென்று எடுத்துக்கொடுத்து உபதேசிக்க தக்ஷணமே தக்ஷிணத்திலுள்ள பொதியமலைக்குப்போய்த் தனிவாசஞ்செய்து, அவ்வாதாரவிதிகளைக்கொண்டு பேரகத்தியம் சிற்றகத்தியம் என்னும் இலக்கண நூல்களை இயற்றி அவற்றைத் தம்முதன் மாணாக்கராகிய தொல்காப்பியர், அதங்கோட்டாசிரியர், துராலிங்கர், செம்பூட்சேய், வையாபிகர், வாய்ப்பியர், பனம்பாரனார், கழாரம்பனார், அவினயனார், காக்கைபாடினியார், நற்றத்தனார், வாமனனார் ஆகிய பன்னிருவர்க்கும் கற்பித்தருளித் தமிழ்ப்பாஷை தழைத்தோங்கச்செய்துவந்தார் என்பது. அங்ஙனன்றி அகஸ்தியராற் செய்யப்பட்டதெனச் சிலர் பொருள் கூறுவர், அது பொருந்தாது. பாணினிபகவான் வடமொழிக்கு இலக்கணநூ லுண்டாக்கியதுபோல அகஸ்தியர் தமிழிற்கு இலக்கணநூல் உண்டாக்கினாரேயன்றி பாஷையை யுண்டாக்கினாரில்லை; மிகப் பழமையான இந்தத் தமிழ்ப்பாஷையின் ஆதிஸ்திதியை அறுதியிட்டுச் சொல்வது அஸாத்தியம்.

[தொடர்ச்சி]

கம்பராமாயணம்.*

கம்பன் செய்த ராமாயணம் என்பது இதன் பொருள்.

ராமாயணம் என்பது முதலில் வால்மீகி‡ முனிவர் செய்த நூலுக்கு இயற் பெயராய் அதுபோன்ற நூலாதலால் இதற்கு உவமையாகு பெயராயிற்று. இராமசரித்திரஞ் சொல்வது ஒப்புமை.

இனி ராமாயணம் என்பது ராம + அயந என்றிரண்டு மொழிசேர்ந்தது. 'தன்திறத்தில் யாவரும் மனங்களித்திருக்கப் பெற்றவன்' என்பது ராம என்னுஞ் சொல்லுக்குப்பொருள். சகல சற்குணங்களும் பொருந்தினவன் என்பது கருத்து. †அயநம் அடைய அல்லது அறியக் கருவியாயுள்ளது. ஆகவே, இராமனை அடைய அல்லது அறியக் கருவியாயுள்ள நூல் என்பதாம். 'இராமனுடைய குணதிவைபவங்களைத் தெரிவிக்கும் நூல்' என்பது திரண்டபொருள். வால்மீகி முனிவர் முதலில் தாம் செய்தநூலுக்கு இதைப்பெயராகக் கொண்டாராதலால், 'ராமாயணம்' என நகரம் ணகரமாயிற்று. ஆனதால் கம்பர்செய்த நூலுக்கு இது ஆகுபெயரென்னப்பட்டது. முதனூலால் இப்பெயர் வந்ததென்பதும் ஒக்கும்.

இராமாயணத்தை வடமொழியில் முதலிற் செய்தவர் வான்மீகி முனிவர். இவர் ஸ்ரீராமபிரான் பூலோகத்தில் எழுந்தருளியிருக்கையிலேயே பாலகாண்டமுதல் யுத்தகாண்டமீறுக ஆறு காண்டங்களுள்ள ராமாயணத்தைச் செய்தருளி அவர் சன்னிதியிலேயே அரங்கேற்றினர்; ஸ்வாமி தன்னடிச்சோதிக்கு எழுந்தருளினபின் உத்தரகாண்டத்தை யியற்றியருளினர். அது நாரதமுனிவருபதேசத்தாலும் பிரமதேவரனுக்கிரகத்தாலும் செய்யப்பட்டதாகையால் ஸ்ரீமத்ராமாயணமென்று விசேஷபிரமாணமாய் வைதிகமதஸ்தர்கள் யாவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட நூலாயிருக்கின்றது. இதுதான் ஸம்ஸ்கிருதபாஷையில் ஆதிகாவியம். பின்பு பிறமுனிவரும்

---

* இந்த முகவுரை பெரும்பாலும் தி. ஈ. ஸ்ரீநிவாச ராகவாசாரியரால் கலாவர்த்தனி பத்திரிகைமுதலியவற்று ளெழுதப்பட்டது.

† வால்மீகி.—இவரைப்பற்றிய சங்கதிகளும் முதலில் இவர் இராமாயணம்செய்த வரலாறும் புராணநாம விவரணத்திற்காண்க.

‡ அயனம்=ஸ்தானம், விஷயமெனப் பொருள்கொண்டு இராமனைவிஷயமாகவுடைய நூலெனக் கூறுதலுமொன்று. ராமாயணம் என்பதற்கு சீதையை யறிவிக்கும் பிரபந்தம் எனவும் சிலர் பொருள் உரைத்திருக்கின்றனர்.

கவிஞரும் அதனைப் பல்வகைக் காவியங்களாகவும் நாடகங்களாகவு மிசைத்திருக்கின்றனர். அவ்வாறே பிறபாஷைகளிலும் அந்தந்த வித்வான்கள் செய்திருக்கிறார்கள்.

தமிழில் சங்கத்து ராமாயண மொன்றிருந்ததாப் பெயரேயன்றி வழங்கிவருவது இக்கம்பர் செய்த ராமாயணந்தான். இதுவும் யுத்தகாண்டம் வரையிலேதான் கம்பர் செய்தது. உத்தரகாண்டமோ ஒட்டக்கூத்தராற் செய்யப்பட்டது.

வால்மீகி பகவானாற் செய்யப்பட்ட ஸ்ரீமத் ராமாயணம் இருபத்து நாலாயிரம் கிரந்த சங்கியை யுள்ளது. இக்கம்பராமாயணம் யுத்தகாண்டம்வரையில் பதினாயிரம் பாடற்றொகையுள்ளது. உத்தரகாண்டம் இரண்டாயிரம் பாடற் றொகையுள்ளது.

கம்பர் ஸ்ரீராமசரித்திரத்தைத் தமிழில் ஓர் காவியமாகச் செய்யக்கருதி வால்மீகிமுனிவர் செய்த இதிகாசத்தின்படி செய்தனர்.

"தேவ பாடையி லிக்கதை செய்தவர்
மூவ ரானவர் மூவருண் முந்திய
நாவி னானுரை யின்படி நான்றமிழ்ப்
பாவி னாலிது ணர்த்திய பண்பரோ"

என்கிற செய்யுளால் இது விளங்கும். சரித்திர ஒழுங்குமாத்திரம் வான்மீகத்தின்படி யல்லது வர்ணனை வகைகள் இவருடைய சொந்த கற்பனைகளேயாம். சரித்திரங்களிலும் சிறிது வேறுபாடு உண்டு. அது வேறுபுராணங்களிற் கூறப்பட்டு வான்மீகத்திற்கு ஒத்தது தானெனச் சிலர் உரைத்திருக்கு முறுதிகொண்டு செய்யப்பட்டதென்ன வேண்டும். இங்ஙனமன்றித் "தேவபாடையில" என்னும் பாடலுள் "மூவருண் முந்திய நாவினானுரையின்படி" என்பதற்கு அம்மூவருள் எவர் விசேஷமாகச் சொல்லியிருக்கிறாரோ அவருரையின்படி எனப் பொருள்கூறி வான்மீகத்தினும் இதிலுள்ள வேறுபாட்டைப் பொருத்துவாரு முண்டு. அது பொருந்தாமையைக் காட்டுகிறோம்.

'முந்திய' என்பதற்கு மேம்பட்ட என்பதல்லவோ அவர்கள் கருத்து; மேம்பாடாவது சுருக்கமின்றிப் பெருக்கமாயுரைத்தலோ, அல்லது சிறப்பாயுரைத்தலோ, யாதேனுமாகட்டும். கம்பர் பாயசம் பகிர்ந்தவிடத்திலும், பிராட்டியை இராவணன் தூக்கிக் கொண்டு போனவிடத்திலும், மற்றுஞ் சிலவிடங்களிலும் உரைத்திருக்குங் கதைமுறை வான்மீகத்தினும் பெருகியதுமன்று, சிறந்ததுமன்று. ஆதிகாவிய மென்று ஞானிகள் கொண்டாடிய அந்நூலில் உரைத்தவற்றுள் ஒன்றேனும் வழுவியதென்றாயினுஞ் சிறந்ததன்றென்றாயினும் சான்றோர் கூறுவதில்லை. அன்றியும் கம்பர் கூறியவாறு சரித்

திரவிகற்பம் தேவபாடையிற் செய்த மூவருள் வான்மீகி யொழிந்த வசிட்டர், போதாயனர் என்னு மிருவர்நூலுளாவது காணப்படவேண்டுமே, அப்படியுமில்லை. ஆதலால் 'முந்திய' என்பதற்கு அவ்வுரை பொருந்தாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனியேயாம்.

நன்று; அவர் வான்மீகி உரையின்படி செய்வேனென்று முதலிற்சொல்லி அதற்கு மாறுகக் கூறல் பிரதிக்ஞை வழூவாயல்லவோ என்று ஆக்ஷேபிக்கலாம். ஆயினும் அது குற்றமன்று: எப்படியெனில், வான்மீகத்துக்கு இது வழிநூல்.

"முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி
அழியாமரபினது வழிநூலாகும்"

என்கிற வழிநூலிலக்கணத்துள் பின்னோன்வேண்டும் விகற்பங்கூறுவது தகுதியென்றிருத்தலின் நரசிம்மபுராண முதலியவற்றுட் கூறியபடி சிலவிகற்பங்களை யெடுத்துக்கொண்டபடியாமெனவறிக.

ஸம்ஸ்கிருதத்திலும் போஜராஜன் முதலானோர் 'வான்மீகி சொன்னபடியே' எனவெடுத்துப் பாயச விபாகமுதலிய இடங்களிற் சிறிது வேறு வகை சொல்லியதற்கும் இதுவே நியாயமென்று பெரியோர் சொல்லுவர். இவை யெல்லாம் வால்மீகர்க்கும் ஒப்பே யென உரைப்பர் சிலர் என்றுங் கூறியிருக்கின்றோம்.

இனி, அந்த இராமாயணம் அந்தந்தபாகத்தின் சரித்திரத்தின் பிரதான விஷயத்தைக் குறிக்கும் சொற்களால், பாலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என்று ஆறு காண்டங்களுள்ளது. உத்தரகாண்டமென்று மற்றொருகாண்டமும் உண்டு.

(1) பெரும்பாலும் ஸ்ரீராமர்முதலியோருடைய பால்ய சரித்திரத்தைச் சொல்வது பால காண்டம். (2) அயோத்தியில் நடந்த கதையைச் சொல்வது அயோத்தியா காண்டம். (3) அரணியத்தில் நடந்த சரித்திரத்தை வருணிப்பது ஆரண்ய காண்டம். (4) கிஷ்கிந்தையின் சமாசாரத்தைச் சொல்வது கிஷ்கிந்தாகாண்டம். (5) இலங்கைக் காரியங்களைச் சொல்வது சுந்தரகாண்டம்.* (6) யுத்தத்தைப்பற்றிச் சொல்வது யுத்தகாண்டம். (7) பட்டாபிஷேகத்துக்குப் பின்னிட்ட காரியங்களைச் சொல்வது உத்தரகாண்டம். [உத்தரம்-பிற்பட்டது].

* முதனூலாசிரியராகிய வான்மீகமுனிவர் சரித்திரத்தின் பிரதான விஷயத்தைக் குறிக்குஞ் சொற்களால் இதற்கு முந்திய பாகங்களுக்கு பால

ஆரணியகாண்டம்.

ஆரணியம்=அரணியசம்பந்தமானது [அரணியம்=காடு] ; காண்டம்=கூட்டம், வடசொல் ; அது இங்கு சரித்திரத்தின் ஒரு பாகத்தை யுணர்த்துஞ் செய்யுட்களின் கூட்டம் என்று விசேஷமாகக் கொள்ளத்தக்கது ; ஆகவே, அரணியத்தில் நடந்த விருத்தாந்தங்களைத் தெரிவிக்கும் பாகமென்பது திரண்டபொருள். கங்காநதியைத் தாண்டினது முதல் நடந்த விருத்தாந்தங்களெல்லாம் அரணிய சம்பந்தமானவையே யாயினும் அதில் பரதன் அயோத்தியிலிருந்து வருவது முதலிய கதைகள் சொல்லப்படுதலால், தண்டகாரணியப் பிரவேச விருத்தாந்தம் முதலாகவே ஆரணியகாண்ட மென்னப்படுகிறது.

காண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம் என்றும், பிந்திய பாகத்திற்கு யுத்தகாண்டம் என்றும் பெயரிட்டதுபோல், இலங்கா காரியங்களைச் சொல்லும் இக்காண்டத்துக்கு லங்காகாண்டம் எனப் பெயரிடாமல் சுந்தரகாண்டமென்று பெயரிட்டது என்னவெனின், மற்றக் காண்டங்களிலும் இக்காண்டத்துக்கதை மனதிற்கு மிகுந்த உல்லாசகரமாயும் கடவுளின் அடியாருடைய மகிமை விளக்குவதாயுமிருத்தலால் என்று பெரியோர் உரைக்கின்றனர். இக்காண்டம் முழுதும் ஸ்ரீராமனிடத்தில் மிகுந்த பக்தியுள்ள அநுமானுடைய சரித்திரம். இதன் விவரம்:—அநுமான் மகேந்திர மலையினின்றும் எழும்பித் தனக் குதவியாகவந்த மைநாக பருவதத்தைச் சமாதானம் சொல்லிக் கடந்து தன்வல்லமையைப் பரீக்ஷிக்கவந்த சுரசை யென்பவளை யேமாற்றி நிழலைக்கவர்ந்து பிடிக்கவல்ல ராக்ஷஸியைக்கொன்று கடலைத்தாண்டி இலங்கையிற் குதித்து அதற்குக் காவலாகிய பிடாரியை வென்று சிறிய உருவத்தோடு அந்தப்புர முதலிய பலவிடங்களினுஞ் சீதாப்பிராட்டியாரைத் தேடிக் கடைசியில் அசோகவனத்திற் கண்டு கிட்டிப் பேசிக் கணையாழி கொடுத்துச் சமாதானப் படுத்தி அவ்வனத்தையும் ஒருமண்டபத்தையுமழித்து இராவணனால் ஏவப்பட்ட சேனாதிபதிமுதலானவர்களையும் இராவணனுடைய மகனாகிய அக்ஷனென்பவனையுஞ் சங்கரித்து இராவணனிடத்துச் சென்று பேசி அவனால் வாலில் மூட்டப்பட்ட தியினாலேயே அந்நகரத்தை யெரித்துப் பிராட்டியினிடத்து விடைபெற்று மீண்டுங் கடலைத்தாவிவந்து தம்முடைய துணைவரோடு கூடி வழியிலுள்ள சுக்கிரீவனுடைய மதுவனத்திற் சென்று யாவரோடு மதுவுண்டு துரிதமாய் இராமருடைய சந்நிதியிற் சென்று பிராட்டி அடையாளமாத் தந்த சூடாமணியைக் கொடுத்துச் சீதாபிராட்டியாரின் செய்திகளையெல்லாஞ் சொல்லி அவரையுஞ் சமாதானப் படுத்தினர் என்பதாம்.

மாரீசன் வதைப்படலம்.

அதாவது மாரீசனுடைய வதையைக் குறித்தபடலம். படலம் என்கிற வடசொல்லுக்குக் கூட்டமென்பதே பொருள், ஆயினும் அது சங்கேதத்தால் ஒரு பெரிய வகுப்பினுட்பட்ட சிறிய பாகத்தைக் குறிக்கும். ஆகவே மாரீசன் ஸ்ரீராமன் கையால் உயிர்மாய்ந்த கதையை சொல்லுஞ் சிறிய பிரிவென்றதாயிற்று.

1.—இரைக்கும் நெடுமை பணை அரக்கர் - வீரவாதஞ் செய்கின்ற பெரிய ரணபேரிகைகளையுடைய (கரதூஷணர் முதலிய) ராக்ஷஸர்கள், இறந்ததனை மறந்தனள் போல் - இறந்த செய்தியையும் மறந்தவள்போல, இராமன் துங்கம் வரை புயத்தினிடை கிடந்த பெருமை ஆசை மனம் கவற்ற - ஸ்ரீராமனுடைய உயர்ந்த மலைகளுக் சொப்பாகிய தோள்களிடத்துள்ள மிக்க ஆசையானது மனதை வருத்த, ஆர்முள் ஆகி - பொருளாகி, திரை பரவை பெருமை அகழி திண்மை நகரில் - அலைகளையுடைய கடலாகிய பெரிய அகழியையுடைய (காவல்) வலிமையுள்ள இலங்கா பட்டணத்துக்கு, கடிது ஓடி - விரைவாக ஓடி, சீதை தன்மை உரைப்பென் என - சீதையின் (வடிவழகின்) தன்மையை (வர்ணித்துச்) சொல்வேனென்று நினைத்து, சூர்ப்பணகை வர - சூர்ப்பணகை வருகையில் [வந்தபொழுது], இருந்தான் இருந்த பரிசு உரைத்தும் - (புஷ்பக விமானத்தில்) இருந்தவனாகிய ராவணன் (கொலு) வீற்றிருந்த தன்மையைச் சொல்லுவோம், எ-று.—மன், ஓ - அசைகள்.

'இரைக்கும்' என்பதை அரக்கரோடு கூட்டுக. 'நெடும்பணை யரக்கர்' என்பதற்கு உயர்ந்து பருத்த அரக்கர் எனவும் பொருள் கூறலாம். 'இருந்தான்' - வினையாலணையும் பெயர். 'உரைத்தும்'-தன்மைப் பன்மை வினைமுற்று. 'மறந்தனள்போல்' என்றதனால் மறக்க இயலாததென்றதாயிற்று. 'சூர்ப்பணகை' என்பது முறம் போன்ற நகமுடையவள் என்று காரண இடுகுறிப் பெயராம். அது சூர்ப்ப + நக என்று இரண்டுமொழி சேர்ந்தது. பின்மொழியிலுள்ள நகரம் ராமாயணம் [=ராம+அயந], உத்தராயணம் [=உத்தர + அயந] என்பவற்றிற்போல ணகரமாயிற்று எனவறிக.

சூர்ப்பணகைபோலஆகி எனவர இருந்தான் இருந்தபரிசுஉரைத்தும் என்க.

இது முதல் நான்கு பாட்டுகள் பெரும்பாலும் ஈற்றுச்சீர்களிரண்டும் மாச்சீர்களும் மற்றைநான்கும் காய்ச்சீர்களுமாகிய அடிகளால் வந்த ஆசிரிய விருத்தங்கள்.

2.—நிலை இலா உலகினிடை—ஸ்திரமில்லாத உலகத்தில், நிற்பனஉம் நடப்பனஉம் - தாவரங்களையும் சங்கமங்களையும், நெறியின் ஈந்த - (வேதவிதிதமான) முறைப்படியே சிருஷ்டித்த, மலரின்மேல் நான்முகற்கு உம் வகு

ப்பு அரிது - (திருமாலின் உந்திக்) கமலத்தின்மேல் வீற்றிருக்கும் நான்கு முகங்களை யுடைய பிரமதேவனுக்கும் சிருஷ்டிக்க முடியாததும்; நுனிப்பது ஒன்று வரம்பு இல் ஆற்றல் - மிகச் சூட்சுமமாக வறியத்தக்க ஒப்பற்ற அளவில்லாத ஸாமர்த்தியத்தாலே, உலைவு இலா வகை உழந்த தருமம் என - (தத்தம் வருணாச்சிரம தருமங்களுக் சேற்கத் தமக்கும் பிறர்க்கும்) கெடுதியில்லாத வழியிலே வருந்திச் சம்பாதித்த தருமத்தைப்போல, நினைந்த எலாம் உதவும் தச்சன் புலன் எலாம் தெரிப்பது - நினைத்தவைகளை யெல்லாம் நினைத்தபடி நிருமித்துத் தரவல்ல தெய்வத்தச்சனாகிய விசுவகர்மாவினுடைய (சிற்பப்) புலமை முழுமையையும் விளக்குவதும்; (ஆகிய), ஒன்று புனை மணி மண்டமதனில் பொலிய - இணையில்லாத அலங்கரிக்கப்பெற்ற நவரத்ன கசிதமான மண்டபத்தில் விளங்க, எ-று.—மன் ஓ-அசைகள்.

‘நுனிப்பது’ என்பதை ஆற்றலோடு கூட்டுக. நுனித்தல்=மிகச் சூட்சுமமாக வறிதல். ‘நுனிப்பது’ வினையாலணையும் பெயர். ஆற்றலாலே உதவும் எனக் கூட்டுக. தச்சனுடைய புலனைத் தெரிவிப்பதாகிய மண்டபம், எனவே அவனாற் செய்யப்பட்டது என்றதாயிற்று. நான்முகற்கும் வகுப்பரிதும் தச்சன் புலனெலாந் தெரிப்பதும் (ஆகிய) மண்டபமதனில் பொலிய என்க.

இதுமுதல் 21-ம் பாட்டு வரைக்கும் குளகம். [துளகமாவது,—பல பாட்டாய் ஒரு வினையேனும் ஒரு பெயரேனும் கொண்டு முடிவது. இக்குளகம் வினைகொண்டு முடிந்தது. பெயர்கொண்டு முடிவது வந்துழிக்காட்டுதும். குளகமல்லாதது முத்தகம் என்னப்படும். அது ஒரு செய்யுள் தனியே நின்று ஒருபொருள் பயந்து முற்றுப் பெறுவது. “குளகம் பல பாட்டொரு வினைகொள்ளும்;” “முத்தகச் செய்யுடனிநின்று முடியும்.”—தண்டியலங்காரம். ‘**தாவரங்கள்**’ என்றது மரம் செடி முதலியவைகளை. [தாவரம், அசரம், நிற்பன, நிலையியற்பொருள் என்பன ஒருபொருட் சொற்கள்.] தாவரமல்லாதவை யெல்லாம் **சங்கமங்கள்** என்னப் பெறும். அவை தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வனஎன அறுவகைப்படும். [சங்கமம், சரம், நடப்பன, இயங்கியற்பொருள் என்பன ஒருபொருட்கிளவி.] இத்தாவரசங்கமங்கள் இரண்டுஞ் சேர்ந்து **எழுவகைத் தோற்றம்** என்னப்படும்.

3.—பண்டு - பூர்வத்தில் [திக்குவிஜயம்செய்தகாலத்தில்], அலங்கு திசை களிற்றின் பணை மருப்பின் இணை ஒடிய படர்ந்த பொன் தோள் - (எதிர்நிற்கமாட்டாது) கலங்கிய [அல்லது அசையுந்தன்மையுள்ள] திக்கஜங்களுடைய பருத்த தந்தங்களின் இணைகள் [இரட்டைகள்] ஒடியும்படியாக அகன்ற அழகிய தோள்கள், விண்தலங்கள் உற வீங்கி - ஆகாசத்தின் இடங்களைப் பொருந்தும்படி பருத்து, ஓங்கு மால் உதயம் வரையின் விளங்க - உன்னதமான பெருமைபொருந்திய உதயகிரிபோல விளங்க, மீதில்-அவ

ற்றின்மேல், குண்டலங்கள் - (காதிலணியப்பட்டுத் தொங்கும்) இருபது குண்டலங்களும், குலம் வரையை வலம் வருவான் - மேருமலையை பிரதக்ஷிணமாக வரும்படி, சொழுமை கதிர் கற்றை சூழ் இரவி மண்டலங்கள் பன்னிரண்டு உம் - வளமான கிரண ஸமூகங்கள் சூழப்பெற்ற சூரியமண்டலங்கள் பன்னிரண்டும், நான்கு ஐந்து ஆய் பொலிந்த என - இருபதாகி விளங்கின வென்னும்படி, வயங்க-பிரகாசிக்க ; எ - று.

இரவிமண்டலங்கள் பன்னிரண்டாவன,—தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணிபன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்திரு, துவட்டன் என்னும் துவாதசாதித்தர்களுடைய மண்டலங்கள் எனவறிக.

இராவணன் திக்குவிஜயம் செய்தசங்கதியை **புராணநாமவிவரணம்** என்னுந்தலைப்பில் இராவணன் என்னும் பெயரில் இனி வரும் சஞ்சிகையிற்காண்க. 'வருவான்'-வினையெச்சம். 'பன்னிரண்டும்' - முற்றும்மை. 'தோள் விளங்க, மீதில் குண்டலங்கள் எனவயங்க' என்க.

திக்கஜங்களாவன :—ஐராவதம் (கிழக்கு), புண்டரீகம் (தென்கிழக்கு), வாமனம் (தெற்கு), குமுதம் (தென்மேற்கு), அஞ்சனம் (மேற்கு), புட்பதந்தம் (வடமேற்கு), சருவபூமம் (வடக்கு), சுப்பிரதீபம் (வடகிழக்கு), இவை ஆண்யானைகள். இவற்றிற்குமுறையே பெண்யானைகளாவன:—அப்பிரமை, கபிலை, பிங்களை, அனுபமை, தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி என்பனவாம்.

4.—வாள் உலா(வு)ம் முழுமை மணிகள் வயங்கு ஒளியின் தொகை வழங்க - ஒளி [டால்] வீசுகின்ற பருத்த இரத்தினங்கள் விளங்குகின்ற கதிர்க்கூட்டத்தை வழங்க, வயிரம் குன்றம் தோள் எ(ல்)லாம் படி சுமந்த விடம் அரவின் படம் நிரையின் தோன்ற - வஜ்ரபர்வதத்திற்குச் சமானமாகிய தோள்களெல்லாம் பூமியைத் தாங்கிய விஷத்தையுடைய பாம்பினுடைய (ஆதிசேஷனுடைய) படங்களின் வரிசை போலத் தோன்ற, ஆன்ற காள் எ(ல்)லாம் புடைதயங்க நாமம் நீர் இலங்கையில் தான்வாரியிட்ட கோள் எலாம் கிடந்த நெடுமை சிறை அன்ன நிரை ஆரம் குலவ-மாட்சிமையுள்ள நக்ஷத்திரங்களெல்லாம் பக்கத்திலே விளங்கும்படி அச்சத்தைத் தருகின்ற கடலாற்சூழப்பட்ட இலங்கையிலே தான்வாரியிட்ட கிரகங்களெல்லாம் சிறையிருந்த நெடியகாவற்சாலை போல ஒழுங்காகிய இரத்தின ஹாரம் விளங்க ; எ - று.

மணிகள் வழங்க, தோளெலாம் தோன்ற, அன்ன ஆரங்குலவ என்க.

'நாம்' - உரிச்சொல், இதுபெயர்த்தன்மைப்பட்டு 'அம்' சாரியையைபெற்று நின்றது. Cf. "நாமநீர்வேலியுலகு"—சிலப். 'கோள்'—இது 'க்ரஹம்' என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு.

5.—ஆய்வு அருமை பெருமை வலி அரக்கர் ஆதியோர் நாயகர்-ஆராய்வதற்கருமையாகிய மிக்கபலம் பொருந்திய இராக்கதர் முதலியவர்களின் தலைவர்களுடைய, நளிர் மணி மகுடம் நண்ணலால்-பெருமைபொருந்திய [அல்லது குளிர்ச்சி பொருந்திய] இரத்தின கிரீடங்கள் பொருந்துதலாலே, தேய்வு உற தேய்வு உற பெயர்ந்து-மிகவும் தேயும்படியாகத் தன்னிலை மாறி, செம்மை சுடர் ஆய் மணி பொன் கழல்-சிவந்தகாந்தியுள்ள ஆய்ந்தெடுக்கப்பட்ட ரத்தினங்களிழைத்த பொன்னாற் சமைக்கப்பெற்றவீரக்கழலானது, அடி நின்று ஆர்ப்ப-(அவனுடைய) பாதத்தினிடத்தில் ஓயாமல் சப்திக்க, எ - று.—எ - அசை.

தேய்வுறத்தேய்வுற-இவ்வடுக்கு மிகவும் தேய்வுற என்னும் பொருள் படவந்தது. மகுடம் நண்ணலால் கழல் பெயர்ந்து அடிநின்று ஆர்ப்ப என்க.

'ஆய் மணி' என்றது இரத்தினபரீட்சைசெய்து அவ்வம்மணிச்சாதியிற் குற்றமற்றுச் சிறந்தவெனத் தெரிந்தெடுக்கப்பட்ட மணிகளை யென்க.

'கழல்' - வீரர்காலணி. "வீரத்தில் வீக்கிய கழலே யாடவர் சான்மிசை யணிவடம்"—திவாகரம்.

'பொலங்கழல்'-இதில் பொன் என்னுஞ்சொல் தொல்காப்பியம் புள்ளி மயங்கியலிலே "பொன்னென்கிளவி யீறுகெட முறையின், முன்னர்த் தோன்றும் லகாரமகாரஞ், செய்யுண் மருங்கிற் றொடரியலான" என்னும் ௬௧-ம் சூத்திரவிதிப்படி பொலம் என வந்தது. இதனைப் பிற்காலத்தார் பொன்னின்பரியாயநாமங்களுள் ஒன்றாகக்கொண்டு நிகண்டிற்சேர்த்தனர்.

இது முதல் 12-ம் பாட்டுவரையில் பெரும்பாலும் மூன்றுஞ்சீர் மாச்சீரும் மற்றமூன்றும் விளச்சீர்களு மாகிவருகிற அளவடி நான்குகொண்ட கலிவிருத்தங்கள்.

6.—மூன்று வகை உலகின் உம் முதல்வர் முந்தையோர் - மூவகைப்பட்ட உலகங்களிலுமுள்ள முதல்வர்களும் பெரியோர்களும், ஓவலர் உதவிய பரிசின் ஓங்கல் போல் - ஓயாமற் செலுத்திய காணிக்கைகளின் இராசி போல, தேவர் உம் அவுணர் உம் முதலினோர் - தேவர்களும் அசுரர்களும் முதலானவர்கள், திசை தூவிய நறுமை மலர் குப்பை துன்ன - நாற்றிசைகளிலுமிருந்து (வாழ்த்தித்) தூவிய வாசனை பொருந்திய மலர்க்குவியல் நெருங்க, எ - று.—எ - அசை.

முதல்வரும் முந்தையோரும்—உம்மைகள் தொக்குநின்றன. ஓவலர் என்பதை வினையெச்சமாக்கி 'உதவிய' என்னும் பெயரெச்ச வினையில் முடிக்க. பரிசினேங்கல்போல் மலர்க்குப்பை துன்ன என்க. மூவகையுலகு,—சுவர்க்கம், மர்த்தியம், பாதாளம்.

7.—மின் அவிர் மணி முடி விஞ்சை வேந்தர்கள் - காந்தி விளங்குகின்ற இரத்தின கிரீடங்களணிந்த வித்தியாதர ராஜாக்கள், இன்னபோது இவழி நோக்கும் என்பதை உன்னலர் சரதலம் சுமந்த உச்சியர் துன்னினர்- (இராவணன்) இன்ன சமயத்தில் இப்பக்கம் பார்ப்பானென்பதை உணரமாட்டாராகிக் கைகளைச் சுமந்த தலையினையுடையராய் நெருங்கினவர்களாகி, முறை முறை துறையில் சுற்ற-கிரமக் கிரமமாய் சபாமண்டபத்திலே சூழ, எ-று. ஏ-அசை. 'விஞ்சை'—இது 'வித்யா' என்னும் வடமொழிச் சிதைவு. இது 'விச்சை' எனவும் சிதைந்து வழங்கும்.

8.—மங்கையர் திறத்து ஒன்று மாற்றக் கூறின் உம்—(அருகிலுள்ள) மங்கையரை நோக்கி ஓர் வார்த்தை சொன்னாலும், தங்களை ஆம் என தாழும் சென்னியர் - தங்களை நோக்கிச் சொன்னதாகுமென்று வணங்கப்பெற்ற தலைகளையுடையவராய், அங்கை உம் உள்ளம் உம் குவிந்த ஆக்கையர் - சரதலங்களும் மனமும் குவியப்பெற்ற தேகத்தை யுடையராகி, சிங்கம் ஏறு என திறல் சித்தர்சேர-ஆண் சிங்கம்போல பராக்கிரம மிகுந்த சித்தர் திரண்டு நிற்க, எ-று. ஏ-அசை.

சித்தர் சென்னியரும் ஆக்கையருமாகி எனச்சேரவென்க. 'அங்கை'=அகம்+கை. "அகமுனர்ச்செவிகை வரினிடையன கெடும்." [நன். சூ. 222.] 'ஆக்கை' - இது யாக்கையென்பதின் யகரம் கெடநின்றபெயர், இதனைப் புணர்ச்சியில்விகார மென்பர் - [இலக்கணக்கொத்து சூ-113-ம் அதன் உரையுங் காண்க.]

9.—கின்னரர் - கின்னரர்கள், அன்னவன் அமைச்சரை நோக்கி ஆண்டு ஒன்று நன்மை மொழி பகரினும் நடுங்கு சிந்தையர் - அவன் [இராவணன்] மந்திரிகளைப் பார்த்து அங்கே ஒரு நல்வார்த்தை சொன்னாலும் நடுங்குகின்ற மனமுள்ளவர்களாய், என்னை கொல் பணி என இறைஞ்சுகின்றனர்-என்ன கட்டளையோ வென்று வணங்குகின்றவர்களாய், பெருமை பயம் கிடந்த நெஞ்சினர் - மிக்க பயந்தங்கிய மனமுடையவர்களாய், (சூழ), எ-று. சூழ என்னும் எச்சம் வருவித்துரைக்க. கின்னரர் சிந்தையராகி இறைஞ்சுகின்றனராகி நெஞ்சினராகிச்சூழ என்க.

10.—உரகர்கள் - நாகர்கள், பிரகரம் நெடுமை திசை பெருமை தண்டு ஏந்திய கரதலத்து அண்ணலை - தண்டனைக்குரிய பெரியதிசைக்கு [தென்றிசைக்கு] (அதிபதியாகிய) பெரிய தண்டாயுதத்தை யேந்திய கையினையு

டைய பெருமைபொருந்திய யமதர்மராஜனை, கண்ணின் நோக்கிய நரகினர் ஆம் என நடுங்கு நாவினர் - பிரத்தியக்ஷமாகக் கண்ட நரகவாசிகளாம் என்று சொல்லும்படியாக நடுங்குகின்ற நாவினராகி, தம்மனம் உலைந்து சூழ- தம்முடைய மனந்தளர்ந்து சூழ, எ - று.—ஏ - அசை.

பிரகரம் - அடித்தல், அது இங்கு தண்டனைக்குக் கொள்ளப்பட்டது. பிரகரம் என்னும் பதத்திற்கு தெற்கு என்றே சில வித்வான்கள் பொருளுரைத்திருக்கின்றனர், ஆயினும் அதற்கு ஆகரம் காண்கிலேம்.

உரகர்கள் என நாவினராகி யுலைந்து சூழ என்க.

11.—திசை உறு கரிகளை செற்று - திக்குகளிலே பொருந்திய யானைகளை வலிகெடுத்து [திக்கஜங்களைச் செயித்து என்றபடி], தேவன் உம் வசை உற கைலையை மறித்து - உருத்திர மூர்த்தியும் நிந்தையைப் பொருந்தும்படி கைலாஸபர்வதத்தை மடக்கி [நிலை பெயர்த்து], வான் எலாம் அசைவு உற புரந்தரன் அடர்த்த தோள்களின் இசையினை - சுவர்க்கமுழுதும் நடுங்கும் படி தேவேந்திரனைச் செயித்த (இராவணனுடைய) புஜபலபராக்கிரமத்தை, தும்புரு - தும்புருமுனிவர், இசையின் ஏத்த - இராகத்தோடு எடுத்துப்புகழ, எ - று.—ஏ - அசை. தும்புரு இசையினை யிசையினேத்த என்க. செற்று மறித்து அடர்த்த தோள்கள் எனக்கூட்டுக.

தும்புரு.—இவர் கந்திருவர்களுடைய குரு. நாரதர் தும்புரு இவர்களிருவரும் வீணைவாசிப்பதிற் சிறந்தவர்களென்று பிரசித்தி. இத்தும்புருவினுடைய பெயரே ஓர் நரம்புக்கருவிக்கு தம்புரு என மருவிவழங்குகின்றது.

12.—நாரதன் - நாரதமகா முனிவர், சேண் உயர் நெறி முறை திறம்பல் இன்றி-ஆகாயத்தினிடத்திலே உயருகின்ற (ஸ்வரங்களின்) ஸ்தாயிக்கிரமத்தில்வித்தியாசமில்லாமல், பாணிகள் பணி செய-கைகள் (அந்தந்தஸ்வரஸ்தானங்களிலே) வேலைசெய்ய, பழுது இல்பண்ணிடை - குற்றமற்ற இராகத்தில், வீணையின் நரம்பிடை விளைத்த தே மறை - தமது வீணையினது தந்திகளிடத்திலே யுண்டாக்கிய [வாசித்த] மதுரமாகியகாந்தருவவேதத்தை, வாணியின் - சரசுவதியைப் போலே, செவியில் வார்க்க - காதுகளிலே ஊற்ற, எ - று.

நாரதன் தேமறைசெவியில் வார்க்க என்க.

சரசுவதியின் வீணைக்கு கச்சபி என்றும், தும்புருவின் வீணைக்கு களாவதி என்றும், நாரதருடைய வீணைக்கு மஹதி என்றும் பெயராம்.

ஸ்வரங்கள் நெறியிற்றிறம்பாமையாவது,—1 ஷட்ஜம், 2 ருஷபம், 3 காந்தாரம், 4 மத்தியமம், 5 பஞ்சமம், 6 தைவதம், 7 நிஷாதம், என்னும் ஏழு ஸ்வரங்களும் லகு, குரு, துருதம், அநுதுருதம் ஆகிய மாத்திரைகளிலும், ஆரோகண அவரோகண முறையிலும் பிறழாமையாம்,

நாரதர்—இவரைக்குறித்த சங்கதிகளை புராணநாமவிவரணம் என்னும் தலைப்பில் மேல் சஞ்சிகையிற் காண்க.

13.—சிகரம் மகரம் வேலை காவலன் - அலைகளையும் சுறுமீன்களையும் உடைய சமுத்திரத்துக்குத் தலைவனான வருணன், விண்ணவர் தரு உம் விஞ்சை நாகம் உம் சுரந்த தீ தேன் - தேவர்களுடைய சற்பகத் தருவின் மலர்களும் வித்தியாதர லோகத்துச் சுரபுன்னை மலர்களும் சுரந்த இனிமையான தேனை, புனலொடு உம் அளாவி - தூய நீரோடு கலந்து, மேகம் என் துருத்திகொண்டு - மேகமென்கிற வீசுகுழலிலே பெய்துகொண்டு, நவ்வி தோகையர் துகிலில் தோயும் என்பது ஒன்று நுணுக்கத்தோடு உம் சிந்த - (சபையிலுள்ள) அழகிய மயில் போலுஞ் சாயலையுடைய மாதரது சேலையிற் படப்போகிறதென்னும் ஒரச்சத்தோடு தெளிக்க, எ-று.

மென் துருத்தி எனவும் கொள்ளலாம். வேலைக்காவலன் அளாவிகொண்டு நுணுக்கத்தோடுசிந்த என்க.

இந்தப்பாட்டும் அடுத்தபாட்டும் பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும் மற்றநான்கும் மாச்சீர்களுமாகிய அடிகளால்வந்த **ஆசிரிய விருத்தங்கள்.**

14.—சமீரணன் - வாயுதேவன், நறை மலர் தாது உம் தேன் உம்- வாசனை பொருந்திய பூந் தாதுக்களும் தேனும், நளிர் நெடுமை மகுடம் கோடி முறை முறை அறைய சிந்தி முரிந்து உகு மணி உம் முத்து உம்-பெருமை பொருந்திய நீண்ட பல கிரீடங்கள் ஒன்றோடொன்று தாக்குதலாலே பின்னப்பட்டு ஒடிய அவற்றினின்றுஞ் சிந்துகின்ற இரத்தினங்களும் முத்துக்களும், தறையிடை உகாத முன்னம் - தரையிற் சிந்துவதற்கு முன்பே, தழுவிவாங்கி தாங்கினன் - எட்டியேந்தித் தாங்கினவனாகி, துறை தொறு உம் தொடர்ந்து நின்று துடைப்ப - அம் (மண்டபத்தின்) துறைகளெல்லாம் வியாபித்துநின்று சுத்திசெய்ய, எ-று.

சமீரணன் தழுவிவாங்கித்தாங்கி தொடர்ந்துநின்று துடைப்ப என்க.

15.—பொன் ஒடு வெள்ளி உம் - பிரகஸ்பதிபகவானும் சுக்கிராசாரியரும், மின் உடை வேத்திரம் கையர் - மின்னலும் தாழ்ந்து போகின்ற (காந்தியையுடைய பொற்) பிரம் பேந்திய கையினர்களும், மெய் புக துன் நெடுமை கஞ்சுகம் துகிலர் - உடம்பிலே புகும்படி நெருங்கிய நிலையங்கிகளையுடையவர்களும், சோர்வு இலர் - தளர்ச்சியில்லாதவர்களும் ஆகி, புரந்தராதியர்க்கு-தேவேந்திரன் முதலானோர்க்கு, முறை முறை - அவரவர்க்குத் தக்க முறைப்படி, இருக்கை - ஆசனங்களை, இனிமை இயல் ஈய - இனிய தன்மையோடு அளிக்க, எ-று.

ஒடு எண்ணுப் பொருளில் வந்தது.—பொன்னும் வெள்ளியும் கையரும் துகிலரும் சோர்விலருமாகி இருக்கை யீய என்க.

இதுமுதல் 58 - ம் பாட்டுவரையில் பெரும்பாலும் மூன்றுஞ்சீர்மாச்சீரும் மற்றைமூன்றும் விளச்சீர்களுமாகிவருகிற அளவடி நான்குகொண்ட கலி விருத்தங்கள்.

16.—காலன் - காலக்கடவுள் [யமன்], சூலம் ஏ முதலிய துறந்து - சூலம் முதலிய தன்னுடைய ஆயுதங்களை வைத்துவிட்டு, சுற்றிய சேலை யால் - அரையிற் சுற்றிய வஸ்திரத்தினால், செம்மை கையின் சிறிய வாய் புதைத்து-சிவந்த கையினாலே தன்னுடையசிறிய வாயை மூடிக்கொண்டு, தோல் உடை நெடுமை பணை துவைக்கும் தோறு எலாம் -வாரினாற்கட்டப் பட்ட பெரிய பேரிகைகள் அடிக்கப்படுஞ் சமயங்களிலெல்லாம், இசைக்கும் நாள் கடிகை வந்து கூற - ஒலிக்கும் ஓரைகளை இத்தனையென்று வந்துசொல்ல, எ-று.—காலன் துறந்து புதைத்து வந்து கூறஎன்க.

17.—வயங்கு எரி கடவுள் உம் - பிரகாசிக்கின்ற அக்கினி பகவானும், நயம் கிளர் நானம் நெய் அளாவி - மேன்மை சிறந்த [சிரேஷ்டமான] கஸ்தூரி கலந்த நெய்யைச் சேர்த்து, நந்தல் இல் வியம் கருப்பூரம் மென் பஞ்சின் மீ கொளீஇ - (மணம்) கெடுதலில்லாத பெருமை பொருந்திய கருப்பூரத்தை [பச்சைக் கருப்பூரத்தை] மிருதுவாகிய பஞ்சின்மேலே சேர்த்து, கயங்களில் மரை மலர் காடு பூத்தது என - தடாகங்களிலே தாமரை மலர்க்காடுகள் பூத்ததுபோல, விளக்கம் மாட்ட - தீபங்களை ஏற்ற, எ-று.

மரை - இது தாமரை என்பதன் முதற்குறை. எரிக்கடவுள் அளாவி கொளீஇ என விளக்கம்மாட்ட என்க.

18.—நன்மை புதிது அலர் கற்பகம் தரு உம் - நல்ல அன்றலர்ந்த கல்பவிருட்சமும், பொய் இலா கதிர் நெடுமை மணிகள் உம் - மெய்யான காந்தியையுடைய சிந்தாமணி முதலியனவும், கறவை ஆன்கள் உம் - காமதேனுக்களும், நிதிகள் உம் - நவநிதிகளும், அருள் அறிந்து - (இராவணனுடைய) அருளையறிந்து, அதிசயம் அளிப்பதற்கு - விஸ்தாரமாகக் கொடுப்பதற்கு, முறை முறை நின்று நீட்ட - கிரமமாக நின்று (தமது கைகளை) நீட்டிக்கொண்டிருக்க, எ - று.

கற்பகத்தருவும் மணிகளும் ஆன்களும் நிதிகளும் அறிந்து நின்று நீட்ட என்க.

நவநிதிகளாவன.—மஹாபத்மம், பத்மம், சங்கம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம் என்பனவாம்.

19.—குண்டலம் முதலிய குலம் கொள் பெருமை அணி - மகரகுண்டலங்கள் முதலாகிய சிரேஷ்டமான பெரிய ஆபரணங்கள், மண்டிய பெருமை ஒளி வயங்க வீசலால்-நெருங்கியவிசேஷகாந்திகளை விளக்கமாக வீசுதலாலே, உலகம் எழின் உம் இனி இரவு உண்டு கொல் (என்ன) - ஸப்தலோகங்க

ளிலும் இனி இராத்திரியென்பதன்மேடா என்றுசொல்ல, எட்டுதிசை மருங்கின் உம் இருள் இன்று என்ன- எட்டுத்திக்குகளிடத்தும் இருளென்பதில்லை என்று சொல்ல, எ-று.

இரவு உண்டு கொல் என்ன, இருள் இன்று என்ன என்க.

20.—வார் விசி கருவியோர் வகுத்த பாணியின் - வார்களினாலே கட்டுதல் பொருந்திய மத்தளக்காரர் (அவ்வச்சமயத்துக்கு அனுகுணமாக) ஏற்படுத்திய பாட்டுக்களின்படியே, ஊருவில் தோன்றிய உயிர் பெய் ஓவியம்- (நாராயணனுடைய) தொடையிலே உண்டான உயிர் கொடுக்கப்பெற்ற சித்திரம் போன்றவளாகிய ஊர்வசியும், நாரியர் - மற்றபெண்களும், காரினில் செருக்கிய கலாபம் மஞ்ஞைபோல்-கார்காலத்தில் களிப்படைந்துள்ள தோகையுடைய மயில் போல, அருமை நடம் நடிப்ப நோக்கி - அருமையான நாட்டியத்தைச் செய்யப்பார்த்து, (எ - று).

ஊர்வசி நாராயணமுனியினுடைய தொடையில் உண்டான கதையை புராணநாம விவரண மென்னும் தலைப்பில் **ஊர்வசி** என்னும் பெயரிற்காண்க.

மற்றபெண்களாவார் மேனகை, அரம்பை, கிருதாசி, திலோத்தமை என்பவர்கள். இவர்கள் சுவர்க்கலோகத்து வேசையர்கள்.

21.—உலகங்கள் இரண்டு உம் ஒன்று உம்-மூவுலகங்களையும், தன் அருமைதவம் உடைமையின் அளவு இல் ஆற்றலின் பொருந்திய இராவணன் - தன்னுடையசெய்தற்கரிய தபோபலத்தாலும் அபாரமானசௌரியத்தாலும் தனக்குச் சொந்தமாகப் பொருந்திய இராவணனனவன், புருவம் சார்முகம் கருமை தடம் கண்ணியர் கண்ணின் வெள்ளத்து இருந்தனன்-வில்லுக் கொப்பாகிய புருவத்தையும் கறுத்த பரந்த கண்களையுமுடைய பெண்களுடைய பார்வையாகிய வெள்ளத்தினிடத்திலே இருந்தான், எ-று.

இராவணன் இருந்தனன் என்க.

இவ்விருபத்தொரு செய்யுளையும்,—இராவணன் (21), மண்டபமதனிற் பொலிய (2), தோள்விளங்க, மீதில் குண்டலங்கள் வயங்க (3), மணிகள் ஒளியின் தொகை வழங்க, தோளெலாம் படிகிரையிற்றோன்ற, ஆரங்குலவ (4), கழல் ஆர்ப்ப (5), மலர்க்குப்பைதுன்ன (6), விஞ்சை வேந்தர்கள் சுற்ற (7), சித்தர்சேர (8), கின்னரர்சூழ (9), உரகர்கள்சூழ (10), தும்புருவேத்த (11), நாரதன் தேமறைசெவியின் வார்க்க (12), வேலைக்காவலன் தேந்தேன்புனலொடு மளாவிச்சிந்த (13), சமீரணன் துடைப்ப (14), பொன்னொடு வெள்ளியும் இருக்கை சுய (15), காலன் நாட் கடிகை கூற (16), எரிக்கடவுள் விளக்கமாட்ட (17), கற்பகத்தருவும் மணிகளும் சுறவையான்களும் நிதிகளும் நீட்ட (18), இரவு உண்டு சொல் என்ன, இருள் இன்று என்ன (19),

ஷுருவிற்றேன்றிய உயிர்பெய்யோவியமும் நாரியரும் நடிப்ப நோக்கி (20), இருந்தனன் (21), என ஒரு வாக்கியமாக்கி 'விளங்க' என்பது முதலிய செயவெனெச்சங்களை யெல்லாம் வினைச்செவ்வெண்ணாக வைத்து அவற்றினிறுதியில் எண்ணும்மை விரித்துப் பொருளுணர்ந்து கொள்க.

புராணநாம விவரணம்.

இராமன்.—ஸ்ரீமகா விஷ்ணுவினுடைய தசாவதார மூர்த்திகளுள் ஏழாவது மூர்த்தி. இவர் இக்ஷுவாகு வமிசத்திற்பிறந்த அஜமஹாராஜாவின் குமாரரான தசரதமகாராஜாவுக்குக் கோசலை யாரிடத்துப்பிறந்த புத்திரர். மனைவியார்—சீதை. உடன்பிறந்தோர்—பரதன், இலக்ஷுமணன், சத்துருக்கினன். இவர் "தந்தைசொன் மிக்க மந்திர மில்லை" என்பதனால் பிதுருவாக்கிய பரிபாலனஞ் செய்யும் பொருட்டுத் தம்முடைய பத்தினியாகிய சீதையோடும் தம்பியாகிய இலக்ஷுமணனோடும் பதினான்குவருஷம் வானவாசம் செய்து இராவணன் கும்பகர்ணன் முதலிய அரக்கரைமுடித்து தண்டகாரணிய வாசிகளாகிய முனிவர்களுக்குச் சுகத்தை யுண்டாக்கினார். இவர் தண்டகாரணியத்திலிருந்த பொழுது சீதையை இராவணன் எடுத்துக்கொண்டுபோக, மனைவியைத்தேடிப்போய் இருசியமுக பர்வதத்தில் சுக்கிரீவனைச் சிநேகஞ் செய்துகொண்டு அவனை வீட்டைவிட்டோட்டிய அவனண்ணனாகிய வாலியைக்கொன்று வானரராச்சியத்துக்கு அவனையரசனாக்கி அவனுதவியால் இலங்கையைச்சேர்ந்து இராவணனோடு போர்புரிந்து அவனை முடித்தார்.

தசரதன் மகனா னமைபற்றி தாசரதி என்றும், ககுத்தன் வமிசத்திற் பிறந்தமையின் காகுத்தன் என்றும், ரகுவினுடைய குலத்திற்பிறந்தமையின் ராகவன் என்றும் இவர்க்கு நாமங்களுண்டு.

பூர்வகாலத்தில் தேவாசுரர்களுடைய யுத்தத்தில் அசுரர்க்கு நன்மைவேண்டிய பிருகுமகரிஷியின் பத்தினியை விஷ்ணுவானவர் தலையைத் தணித்தார். அதற்கம்முனிவர்சினந்து விஷ்ணுவைநோக்கி 'நீமானிடவடிவெடுத்து மனைவியைப்பிரிந்து மட்டற்ற மனவருத்த மடைக' என்று சபித்தார். அதனால் விஷ்ணுவானவர் இராமனென்னும்பெயரால்மனுஷியாவதாரஞ்செய்து மனைவியைப்பிரிந்து மகத்தான கிலேசமுற்றாரென்று சொல்லப்பட்டிருக்கிறது.